சாட்சிய வாக்குமூலம்

(கு.வி.மு.ச.அத்தியாயம் 23)

முதல் கூடுதல் உதவி அமர்வு நீதிமன்றம், ஈரோடு மாவட்டம்

அமர்வு வழக்கு எண்.102/2017

2025ம் ஆண்டு டிசம்பர் மாதம் 11–ம் தேதி நாள் அரசு தரப்பு சாட்சியாக அ.த.சா.–9வது சாட்சியாக விசாரிக்கப்படுபவர் 1968ம் ஆண்டு 54 வது சட்டத்தில் உள்ள 5(2) பிரிவின்படி ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது. 1,2 எதிரிகள் ஆஜர்.3ம் எதிரி இன்று நீதிமன்றத்தில் ஆஜர் ஆகவில்லை அவர் கு.வி.மு.ச.பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்துள்ளார். அந்த மனு அனுமதிக்கப்பட்டது.அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர் இல்லை.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | நிர்மலா | மாவட்டம் | : | |
| க/பெ.பெயர் | : | சதாசிவம் | தொழில் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| வட்டம் | : | | | | |

<u>முதல் விசாரணை:</u>

1. நான் ஈரோட்டில் மாருதி மெடிக்கல் சென்டர் மற்றும் மருத்துவமனை என்ற பெயரில் என் கணவரும் மற்றும் நானும் கடந்த 20 வருடங்களாக நடத்தி வருகிறோம். ஆஜர் எதிரிகள் என்னுடைய உறவினர்கள் ஆவார்கள். ஆஜர் எதிரிகளுக்கு மஞ்சு என்ற பெண் குழந்தை உள்ளது. அவரை எனக்கு தெரியும். இறந்து போன அருண்ராம் என் கணவருடைய சித்தப்பா மகன் ஆவார்.

2. எனக்கு தாய்வழி மற்றும் தந்தைவழியாக அருண்ராம் எனக்கு உறவினர் ஆவார். இறந்துபோன அருண்ராம் மற்றும் அவரின் மூத்த சகோதரி கோமதி ஆகியோர் பல் மருத்துவம் படிப்பதற்கு நானும், என் கணவரும் மிக உந்துதலாக இருந்தோம். மேற்படி இருவருக்கும் நானும், என் கணவரும் வழிகாட்டியாக இருந்து படிக்க வைத்தோம்.

3. 17.06.2014 அன்று அருண்ராம் தானாக தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார் என்ற தகவல் என் கணவருக்கும், எனக்கும் அலைபேசி மூலம் தெரிந்து கொண்டோம். மேலும் அருண்ராம் இறப்பதற்கு 4

நாட்களுக்கு முன்பு காலை 7 மணி அளவில் நானும், என் கணவரும் டைனிங்டேபிளில் அமர்ந்து காபி அருந்தி கொண்டிருந்தோம். அப்போது என் கணவரின் அலைபேசிக்கு அழைப்பு வந்தது. அந்த அழைப்பு எண் பெயர் இல்லாமல் வந்ததால் என் கணவர் யார் பேசுகிறீர்கள் என்று கேட்டார் அதற்கு மஞ்சு என்று என் கணவரிடம் அறிமுகம் படுத்தி கொண்டார். மேலும் அந்த அலைபேசியில் பெண்மணி பேசுவதால் என் கணவர் தன்னுடைய அலைபேசியை ஸ்பீக்கரில் போட்டு பேசும்போது மஞ்சு ஆனவர் என் கணவரை மாமா என்ற உறவுமுறையில் அழைத்து பேசி அதன்பிறகு மஞ்சு தொடர்ச்சியாக என் கணவரிடம் மேற்கண்ட அழைபேசியில் மஞ்சுவாகிய நானும், இறந்து போன அருண்ராமும் கடந்த 8 வருடங்களாக காதலித்து வருகிறோம் என்று கூறினார்.

4. மேற்படி மஞ்சுவின் பெற்றோர்களான ஆஜர் எதிரிகள் அருண்ராம், மஞ்சுவின் காதலை ஏற்றுக் கொள்ளாததால் மஞ்சுவிற்கு வேறு ஒரு இடத்தில் திருமணம் ஏற்பாடு செய்து உள்ளார்கள் என்று கூறினார். மேலும் 18.06.2014 அன்று மஞ்சுவாகிய எனக்கு சென்னிமலையில் திருமணம் நடைபெற இருப்பதாக கூறினார். மஞ்சு மேலும் எனக்கு திருமணம் உறுதி ஆனதால் அருண்ராம் எவ்வித பிரச்சனை, தொந்தரவுகள் கொடுக்க வேண்டாம் என்று என்னிடமும், என் கணவரிடமும் கூறினார். அதற்கு என் கணவரும், நானும் விசாரித்து பேசுகிறோம் என்று கூறினோம்.

5. என் கணவர் மற்றும் என்னிடம் மஞ்சு பேசி பிறகு மறுநாள் காலை சுமார் 7 மணி அளவில் 2ம் எதிரியான பானுமதி என் கணவர் அலைபேசிக்கு அழைத்தார். நான் அப்போது என் கணவருடன் இல்லை. என் கணவர் 2ம் எதிரி பானுமதியிடம் பேசிய விவரத்தை என்னிடம் கூறினார். மேற்படி என் கணவர் அலைபேசியில் 2ம் எதிரியிடம் பேசி விவரம் ஆனது மஞ்சுவிற்கு திருமணம் நடப்பதால் அருண்ராமிடம் இருந்து எந்த தொந்தரவு இல்லாமல் பார்த்து கொள்ளவும், மேலும் உங்களது பெண்ணை எப்படி பார்த்துக் கொள்விற்களோ அது போல் பார்த்துக்கொள்ளுங்கள் என்று கூறினார். அப்போது 2ம் எதிரியிடம் இருந்து அலைபேசியை 1ம் எதிரி வாங்கி என் கணவரிடம் மஞ்சுவின் திருமணத்தின்போதோ அல்லது திருமணத்திற்கு பின்போ பிரச்சனை தொந்தரவு அருண்ராமால் ஏற்பட்டால் என் கணவரின் தம்பியான அருண்ராமை மறந்துவிட வேண்டியதான், எங்களுக்கும் ஈரோட்டில் ஆட்கள் உள்ளார்கள் என்று என் கணவரிடம் 1ம் எதிரி கூறினார்.

6. 17.06.2014 அன்று அருண்ராம் இறந்த பிறகு 28.06.2014 அன்று அருண்ராம் எழுதிவைத்த தற்கொலை கடிதம் அவர்களின் பெற்றோர் அவரின் அறையை சுத்தம் செய்யும்போது கிடைத்தது அந்த தற்கொலை கடிதத்தை போலீசாரிடம் அ.சா.1 ஆன வாசுதேவன் கொடுத்துவிட்டதாக என் கணவரிடம் கூறினார். 30.06.2014 அன்று போலீசார் என்னை விசாரித்தார்கள். 15.06.2014 அன்று அருண்ராம் என்னையும், என் கணவரையும் எங்களுடைய மருத்துவமனைக்கு வந்து பார்த்தார். அப்போது மன சோர்வுடன், மனம் உடைந்து இருந்தார் அவர் அழுது கொண்டு இருந்தார்.

7. மேலும் அருண்ராம் என் கணவரிடமும், என்னிடமும் மஞ்சுவை கடந்த 8 வருடங்களாக தான் காதலித்து வந்ததாகவும், அருண்ராமும் மஞ்சுவும் திருமணம் செய்து கொள்வதாக உறுதியாக இருந்தோம், மஞ்சுவின் பெற்றோரின் தூண்டுதலின் காரணமாக வேறு ஒரு நபரை திருமணம் செய்ய ஏற்பாடு செய்து வருகிறார்கள் என்று கூறினார். மேலும் அருண்ராம் தன்னுடைய அலைபேசியில் இருந்த மஞ்சு தன்னை அழைத்து தொடர்ப்பு கொண்ட incoming மற்றும் outgoing அழைப்புகளை என்னிடமும், என் கணவரிடமும் காண்பித்தார்.

8. மேலும் அருண்ராம் மிகுந்த மனவேதனையுடன் இருந்தார், அவர் அழுதுகொண்டே இருந்தார். அதன்பிறகு நானும், என் கணவரும் அருண்ராமுக்கு அறிவுரை கூறி அனுப்பிவைத்தோம். நானும், என் கணவரும் அருண்ராமின் தந்தையான வாசுதேவனை என் கணவரின் அலைபேசி மூலம் அழைத்து மேற்கண்ட சங்கதிகளை கூறினோம். மேலும் அருண்ராமை பார்த்துக் கொள்ளுமாறு அறிவுறுத்தினோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-**</u>

எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்களை அழைத்து அவர்கள் ஆஜர் ஆகவில்லை என்பதால் எனவே குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை என்ற காரணத்தினால் குறுக்கு விசாரணை இல்லை என்று முடிக்கப்படுகிறது.